பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

13 02 2025 7 15

வியாழக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. இந்தியா – அமெரிக்கா இடையேயான நல்லுறவை மேலும் வலுப்படுத்துவது தொடர்பாக அமெரிக்க அதிபர் திரு. டொனால்ட் ட்ரம்ப்பை சந்தித்துப் பேசவுள்ளதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

2. உலக நாடுகளுக்கு வர்த்தகம் மற்றும் முதலீட்டு வாய்ப்புகளை அளிப்பதோடு, இந்தியா தீர்வையும் அளித்து வருவதாக மக்களவைத் தலைவர் திரு. ஓம்பிர்லா தெரிவித்துள்ளார்.

3. நாட்டில் சுமார் 150 மாவட்டங்களில் நிலத்தடி நீர்மட்டத்தை உயர்த்தும் வகையில் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று மத்திய அரசு கூறியுள்ளது.

4. யுக்ரைனுக்கு எதிரான போரை நிறுத்துவது தொடர்பாக ரஷ்ய அதிபர் திரு. விளாடிமிர் புடினுடனும், யுக்ரைன் அதிபர் திரு. ஜெலன்ஸ்கியுடனும் அமெரிக்க அதிபர் திரு. டொனால்ட் ட்ரம்ப் விவாதித்துள்ளார்.

5. பஹ்ரைனில் நடைபெற்று வரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் ஜீவன் நெடுஞ்செழியன் - விஜய்சுந்தர் பிரசாந்த் இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

<u>*--- இனி விரிவான செய்திகள் ---*</u>

<<<<>>>>

இந்தியா – அமெரிக்கா இடையேயான நல்லுறவை மேலும் வலுப்படுத்துவது தொடர்பாக அமெரிக்க அதிபர் திரு. டொனால்ட் ட்ரம்ப்பை சந்தித்துப் பேசவுள்ளதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

தமது அமெரிக்க பயணம் குறித்து சமூக வலைதளத்தில் குறிப்பிட்டுள்ள அவர், உலகின் சிறந்த எதிர்காலத்திற்காக இந்தியாவும் - அமெரிக்காவும் இணைந்து செயல்படும் என்று கூறியுள்ளார்.

இந்நிலையில் அமெரிக்காவின் புதிய தேசிய புலனாய்வுப் பிரிவு இயக்குநராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள திருமதி **Tulsi Gabbard**-ஐ பிரதமர் இன்று சந்தித்துப் பேசியுள்ளார்.

இந்தியா - அமெரிக்கா இடையேயான நட்புறவு தொடர்பாக பல்வேறு விவகாரங்கள் குறித்து தாம் அவருடன் விவாதித்தாக சமூக வலைதளத்தில் பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

முன்னதாக தமது ஃபிரான்ஸ் பயணத்தை முடித்துக்கொண்டு பிரதமர் அமெரிக்காவின் வாஷிங்டன் சென்றடைந்தார்.

விமான நிலையத்தில் அவருக்கு அமெரிக்க அரசு சார்பாக சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது.

இதில் இந்திய வம்சாவளியினரும் உற்சாகமாக கலந்துகொண்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

உலக நாடுகளுக்கு வர்த்தகம் மற்றும் முதலீட்டு வாய்ப்புகளை அளிப்பதோடு, இந்தியா தீர்வையும் அளித்து வருவதாக மக்களவைத் தலைவர் திரு. ஓம்பிர்லா தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற வளாகத்தில் 16 நாடுகளைச் சேர்ந்த முன்னணி நிறுவனங்களின் நூற்றுக்கும் மேற்பட்ட தலைமைச் செயல் அதிகாரிகளுடன் அவர் உரையாடினார்.

உலக நாடுகளுக்கு இந்தியா தலைமைத்துவத்துடன் திகழ்வதாகவும் அவர் கூறினார்.

உலகம் ஒரு குடும்பம் என்ற தொலைநோக்கு பார்வையின் அடிப்படையில், அரசியல் ஸ்திரத்தன்மை மற்றும் சிறந்த நிர்வாகம் காரணமாக உலகளாவிய தலைமைத்துவத்தில் இந்தியா முக்கிய பங்கு வகிப்பதாக அவர் தெரிவித்தார்.

நாட்டின் வளர்ச்சி மற்றும் செழிப்புக்கான இந்தியாவின் ஜனநாயக கொள்கைகளின் மகத்துவத்தையும் திரு. ஓம்பிர்லா எடுத்துரைத்தார்.

<<<<>>>>

நாட்டில் சுமார் 150 மாவட்டங்களில் நிலத்தடி நீர்மட்டத்தை உயர்த்தும் வகையில் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று மத்திய நீர்வளத்துறை அமைச்சர் திரு. சி.ஆர். பாட்டீல் தெரிவித்துள்ளார்.

சண்டிகரில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், ஹரியானாவிலும் நிலத்தடி நீர்மட்டத்தை அதிகரிப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று கூறினார்.

ஹரியானாவின் வளர்ச்சித் திட்டங்களுக்காக 76 ஆயிரம் கோடி ரூபாய் பட்ஜெட்டில் ஒதுக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

மத்திய அரசின் மானிய உதவிகள் காரணமாக ஹரியானா விரைவாக வளர்ச்சியடைந்து வருவதாகவும் திரு. சி.ஆர். பாட்டீல் தெரிவித்தார்.

<<<<>>>>

உலக வானொலி தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

வானொலி மூலம் தகவல்களை அறிந்துகொள்வதையும், அதன் முக்கியத்துவம் குறித்தும் மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் இந்நாள் கடைபிடிக்கப்படுகிறது.

இந்நாளையொட்டி பிரசார் பாரதி தலைவர் திரு. **Navneet Kumar Sehgal** வெளியிட்டுள்ள செய்தியில், செய்திகள் மற்றும் தகவல்களை ஒலிபரப்புவதன் மூலம் நாட்டின் கலாச்சார மற்றும் பொருளாதார வளர்ச்சிக்கு வானொலி முக்கியப் பங்கு வகிப்பதாக கூறியுள்ளார்.

ஆகாஷ்வானி தலைமை இயக்குநர் திரு. **Pragya Paliwal Gaur** வெளியிட்டுள்ள செய்தியில், சுமார் 90 ஆண்டுகளாக ஆகாஷ்வாணி மக்களுக்கு தகவல்கள், கல்வி மற்றும் பொழுதுபோக்கு நிகழ்ச்சிகளை வழங்கி வருவதாக குறிப்பிட்டுள்ளார்.

<<<<>>>>

இனி மகா கும்பமேளா குறித்த செய்திகள்...

உத்தரப்பிரதேச மாநிலம் பிரயாக்ராஜில் நடைபெற்று வரும் மகா கும்பமேளாவின் சங்கமத்தை யாத்ரீகர்கள் எளிதல் அடைவதற்காக சிறிய ரக பேருந்து சேவையை அம்மாநில அரசு அறிமுகப்படுத்த உள்ளது.

காவல்துறை ஆணையர் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் இந்த முடிவு மேற்கொள்ளப்பட்டது.

இந்த வசதி, மக்கள் தொலைதூரம் நடப்பதை தவிர்ப்பதுடன் எளிதில் சங்கமத்தை அடைய முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையே பிரயாக்ராஜில் அனைத்து அலுவலகங்களும் இன்று செயல்படும் என்று மாவட்ட ஆட்சியர் அறிவித்துள்ளார்.

நாளை முதல் சி.பி.எஸ்.இ மற்றும் ஐ.சி.எஸ்.இ தேர்வுகள் தொடங்கவுள்ள நிலையில் மாணவர்களின் போக்குவரத்து வசதிக்காக சிறப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

மாணவர்கள் தேர்வு மையத்திற்கு விரைவில் செல்லுமாறும் போக்குவரத்து நெரிசலை தவிர்க்க தங்களது இருசக்கர வாகனங்களைப் பயன்படுத்துமாறும் மாவட்ட நிர்வாகம் கேட்டுக்கொண்டுள்ளது.

<<<<>>>>

மத்திய அரசு பணியாளர்களின் ஓய்வூதியம் தொடர்பான குறைகளை தீர்ப்பதற்கான முகாம் இன்று நடைபெற உள்ளது.

இதில் அத்துறைக்கான மத்திய இணையமைச்சர் திரு. ஜிதேந்திர சிங் கலந்துகொண்டு தொடங்கி வைக்கிறார்.

16 அமைச்சகங்கள் மற்றும் துறைகளில் 4 மாதத்திற்கும் மேலாக தீர்க்கப்படாமல் உள்ள ஓய்வூதிய நிலுவைத் தொகை உள்ளிட்ட குறைகளுக்கு இதில் தீர்வு காணப்பட உள்ளது.

இதில் சம்பந்தப்பட்ட துறையின் உயரதிகாரிகள் பங்கேற்கின்றனர்.

இதற்கிடையே ஓய்வூதியதாரர்களின் குறைகளுக்கு தீர்வு காண்பதற்கு உயர் முன்னுரிமை வழங்கப்பட்டு வருவதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

முன்னதாக நடைபெற்ற முகாமில் 18 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வழக்குகளுக்கு தீர்வு காணப்பட்டுள்ளதாகவும் மத்திய அரசு கூறியுள்ளது.

<<<<>>>>

யுக்ரைனுக்கு எதிரான போரை நிறுத்துவது தொடர்பாக ரஷ்ய அதிபர் திரு. விளாடிமிர் புடினுடனும், யுக்ரைன் அதிபர் திரு. ஜெலன்ஸ்கியுடனும் அமெரிக்க அதிபர் திரு. டொனால்ட் ட்ரம்ப் விவாதித்துள்ளார்.

இதுதொடர்பாக இரு நாட்டு அதிபர்களுடனும் அவர் தொலைபேசி வாயிலாக தொடர்புகொண்டு பேசினார்.

அப்போது அமைதியை நிலைநாட்ட விரும்புவதாக ரஷ்ய அதிபரும், யுக்ரைன் அதிபரும் தம்மிடம் விருப்பம் தெரிவித்ததாக கூறியுள்ளார்.

இது தொடர்பாக இருநாட்டு பிரதிநிதிகளும் விரைவில் பேச்சு நடத்த திரு. புடின் ஒப்புக்கொண்டதாக அவர் தெரிவித்துள்ளார்.

விரைவில் யுக்ரைன் அதிபர் திரு. ஜெலன்ஸ்கியுடன் தாம் தொடர்பு கொண்டு ரஷ்யா – யுக்ரைன் இடையேயான பேச்சுகள் குறித்து தெரிவிக்க உள்ளதாக அவர் கூறியுள்ளார்.

இதற்கிடையே திரு. புடினும், திரு. ட்ரம்ப்பும் சந்தித்துப் பேசவுள்ளதாக ரஷ்ய தரப்பு தெரிவித்துள்ளது.

இதற்காக மாஸ்கோ வருமாறு திரு. ட்ரம்புக்கு ரஷ்ய அதிபர் அழைப்பு விடுத்துள்ளதாக க்ரெம்ளின் மாளிகை தெரிவித்துள்ளது.

<<<<>>>>

அமெரிக்காவின் புதிய தேசிய புலனாய்வுப் பிரிவு இயக்குநராக திருமதி **Tulsi Gabbard** தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

இதற்காக நடைபெற்ற செனட் தேர்தலில் 52-48 என்ற வாக்குகளின் அடிப்படையில் அவர் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது.

<<<<>>>>

தமிழகத்தில் கிராமப்புற மாணவர்கள் கல்வியில் சிறந்து விளங்க வேண்டும் என்ற நோக்கில் பல்வேறு திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வருவதாக மாநில வனத்துறை அமைச்சர் திரு. பொன்முடி கூறியுள்ளார்.

விழுப்புரம் மாவட்டம் வானூர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி பட்டமளிப்பு விழாவில் பங்கேற்ற அவர், 210 மாணவர்களுக்கு பட்டங்களை வழங்கி உரையாற்றினார்.

கிராமப்புற மாணவர்கள் கல்லூரிப் படிப்பை நிறைவு செய்ய வேண்டும் என்ற அடிப்படையில் அரசு அமல்படுத்தி வரும் பல்வேறு திட்டங்களை அவர் பட்டியலிட்டார்.

எனவே இதனைப் பயன்படுத்தி போட்டித் தேர்விலும் மாணவர்கள் பங்கேற்று வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக்கொள்ள வேண்டும் என்று திரு. பொன்முடி அறிவுறுத்தினார்.

<<<<>>>>

பஹ்ரைனில் நடைபெற்று வரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் ஜீவன் நெடுஞ்செழியன் - விஜய்சுந்தர் பிரசாந்த் இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

ஆடவர் இரட்டையர் பிரிவு முதல் சுற்றில் இந்த இணை, 6-4, 7-6 என்ற செட் கணக்கில் சாகேத் மைனேனி - **Sinclair** இணையை வென்றது.

-------------

இங்கிலாந்துக்கு எதிரான 3வது மற்றும் இறுதி ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் இந்தியா 142 ரன் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

அகமதாபாதில் நடைபெற்ற இப்போட்டியில் முதலில் பேட் செய்த இந்திய அணி, நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவரில் 356 ரன் எடுத்து ஆட்டமிழந்தது.

ஷுப்மன் கில் 112 ரன்னும், ஷ்ரேயாஸ் அய்யர் 78 ரன்னும், விராட் கோலி 52 ரன்னும் எடுத்தனர்.

இங்கிலாந்து பந்துவீச்சாளர் ஆதில் ரஷீத் 4 விக்கெட் வீழ்த்தினார்.

357 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் களமிறங்கிய இங்கிலாந்து அணி, 34 புள்ளி 2 ஓவரில் 214 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

இந்திய பந்துவீச்சாளர்கள் அர்ஷ்தீப் சிங், ஹர்ஷித் ரானா, அக்சர் பட்டேல், ஹர்திக் பாண்ட்யா ஆகியோர் தலா 2 விக்கெட் வீழ்த்தினார்கள்.

மூன்று போட்டிகளைக் கொண்ட இந்தத் தொடரில் இந்தியா அனைத்து ஆட்டங்களிலும் வெற்றி பெற்றது.

-------------

ஐ.எஸ்.எல். கால்பந்துப் போட்டியில் கோவா அணி 3-1 என்ற கோல் கணக்கில் மும்பை அணியை வென்றது.

இன்று நடைபெற உள்ள ஆட்டத்தில் ஜம்ஷெட்பூர் அணி – ஒருங்கிணைந்த வடகிழக்கு அணியை எதிர்கொள்கிறது.

------------

தேசிய விளையாட்டுப் போட்டியின் ஆடவர் ஈட்டி எறிதல் பிரிவில் உத்தரப்பிரதேச மாநிலத்தைச் சேர்ந்த சச்சின் யாதவ் 84 புள்ளி மூன்று ஒன்பது மீட்டர் தூரத்திற்கு ஈட்டி எறிந்து தங்கப்பதக்கம் வென்றார்.

இதன் மூலம் 10 ஆண்டுகால முந்தைய சாதனையை அவர் முறியடித்தார்.

மகளிர் 5 ஆயிரம் மீட்டர் ஓட்டப்பிரிவில் உத்தராகண்டில் அங்கிதா தியானி தங்கம் வென்றார்.

**<<<<The End>>>>**